ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி

# 9 – வன்தாளினிணை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9 – வன்தாளினிணை

‡ வன் தாளின் இணை வணங்கி வள நகரம் தொழுதேத்த ⋆
மன்னன் ஆவான் நின்றாயை ⋆
அரி அணை மேல் இருந்தாயை ⋆
நெடுங்கானம் படரப் போகு என்றாள் ⋆
எம் இராமாவோ ⋆
உனைப் பயந்த கைகேசி தன் சொற் கேட்டு ⋆
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் ⋆
நன்மகனே ! உன்னை நானே ॥ **9.1** ॥

வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு ⋆
இரு நிலத்தை வேண்டாதே விரைந்து ⋆
வென்றி மை வாய களிறொழிந்து தேர் ஒழிந்து மா ஒழிந்து ⋆
வனமே மேவி ⋆
நெய் வாய வேல் நெடுங்கண் ⋆
நேர் இழையும் இளங்கோவும் பின்பு போக ⋆
எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ ! ⋆
எம் பெருமான் ! என் செய்கேனே ॥ **9.2** ॥

கொல் அணை வேல் வரி நெடுங்கண் ⋆
கௌசலை தன் குல மதலாய் ! குனி வில் ஏந்தும் ⋆
மல் அணைந்த வரைத் தோளா ⋆
வல் வினையேன் மனம் உருக்கும் வகையே கற்றாய் ⋆
மெல் அணை மேல் முன் துயின்றாய் ⋆

இன்றினிப் போய் வியன் கான மரத்தின் நீழல் ⋆
கல் அணை மேல் கண் துயிலக் கற்றனையோ ⋆
காகுத்தா ! கரிய கோவே ‖ **9.3** ‖

வா போகு வா இன்னம் வந்து ⋆
ஒரு கால் கண்டு போ மலராள் கூந்தல் ⋆
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா ⋆
விடையோன் தன் வில்லைச் செற்றாய் ⋆
மா போகு நெடுங்கானம் ⋆
வல் வினையேன் மனம் உருக்கும் மகனே ! ⋆
இன்று நீ போக என் நெஞ்சம் ⋆
இரு பிளவாய்ப் போகாதே நிற்கு மாறே ‖ **9.4** ‖

பொருந்தார் கை வேல் நுதி போல் பரல் பாய ⋆
மெல் அடிக்கள் குருதி சோர ⋆
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப ⋆
வெம் பசி நோய் கூர ⋆
இன்று பெரும் பாவியேன் மகனே ! போகின்றாய் ⋆
கேகயர் கோன் மகளாய்ப் பெற்ற ⋆
அரும் பாவி சொற் கேட்ட அரு வினையேன் ⋆
என் செய்கேன் ! அந்தோ ! யானே ‖ **9.5** ‖

அம்மா ! என்றுகந்தழைக்கும் ⋆
ஆர்வச் சொல் கேளாதே அணி சேர் மார்வம் ⋆
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே ⋆
முழுசாதே மோவாதுச்சி ⋆
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும் ⋆
கமலம் போல் முகமும் காணாது ⋆

எம்மானை என் மகனை இழந்திட்ட ⋆
இழி தகையேன் இருக்கின்றேனே ‖ **9.6** ‖

பூ மருவு நறுங்குஞ்சி புன் சடையாப் புனைந்து ⋆
பூந் துகில் சேர் அல்குல் ⋆
காமர் எழில் விழல் உடுத்துக் கலன் அணியாது ⋆
அங்கங்கள் அழகு மாறி ⋆
ஏ மரு தோள் என் புதல்வன் ⋆
யான் இன்று செலத்தக்க வனம் தான் சேர்தல் ⋆
தூ மறையீர் இது தகவோ ⋆
சுமந்திரனே ! வசிட்டனே ! சொல்லீர் நீரே ‖ **9.7** ‖

பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் ⋆
தம்பியையும் பூவை போலும் ⋆
மின் பற்றா நுண் மருங்குல் ⋆
மெல்லியல் என் மருகியையும் வனத்தில் போக்கி ⋆
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு ⋆
என்னையும் நீள் வானில் போக்க ⋆
என் பெற்றாய் கைகேசீ ⋆
இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே ‖ **9.8** ‖

முன் ஒரு நாள் மழு ஆளி சிலை வாங்கி ⋆
அவன் தவத்தை முற்றும் செற்றாய் ⋆
உன்னையும் உன் அருமையையும் உன்மோயின் வருத்தமும் ⋆
ஒன்றாகக் கொள்ளாது ⋆
என்னையும் என் மெய் உரையும் மெய்யாகக் கொண்டு ⋆
வனம் புக்க எந்தாய் ⋆

நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் ⋆
ஏழ் பிறப்பும் நெடுந் தோள் வேந்தே ॥ **9.9** ॥

தேனகு மா மலர்க் கூந்தல் கௌசலையும் ⋆
சுமித்திரையும் சிந்தை நோவ ⋆
கூன் உருவின் கொடுந்தொழுத்தை சொற் கேட்ட ⋆
கொடியவள் தன் சொற் கொண்டு ⋆
இன்று கானகமே மிக விரும்பி ⋆
நீ துறந்த வள நகரைத் துறந்து ⋆
நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன் ⋆
மனு குலத்தார் தங்கள் கோவே ॥ **9.10** ॥

‡ ஏர் ஆர்ந்த கரு நெடுமால் இராமனாய் ⋆
வனம் புக்க அதனுக்காற்றாத் ⋆
தார் ஆர்ந்த தடவரைத் தோள் தயரதன் தான் புலம்பிய ⋆
அப்புலம்பல் தன்னை ⋆
கூர் ஆர்ந்த வேல் வலவன் கோழியர் கோன் ⋆
குடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
சீர் ஆர்ந்த தமிழ் மாலை இவை வல்லார் ⋆
தீ நெறிக்கண் செல்லார் தாமே ॥ **9.11** ॥

அடிவரவு — வன்தாள் வெவ்வாயேன் கொல்லணை வாபோகு பொருந்தார் அம்மா பூ பொன் முன் தேன் ஏரார்ந்த அங்கண்

வன்தாளினிணை முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்